**அகலவத்த பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அகலவத்த பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 42,900 தொகையான வேலை இருப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதி கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | மூலதன செலவினங்கள் ரூபா 2,321,687 தொகை மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2021 இன் பாதீட்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | மீளாய்வாண்டில் ரூபா 954,085 தொகையான கட்டிட நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்ட ரூபா 4,785,000 பெறுமதியான 07 மோட்டார் வாகனங்களும் வண்டியும் மற்றும் ரூபா 180,000 | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான மல்டி சொப்பர் இயந்திரம் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 8,000,000 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 6,096,390 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,903,610 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு | - | சபைக்குச் சொந்தமான ஒட்டுமொத்த வீதிகளின் அளவும் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான ஒட்டுமொத்த வீதிகளின் அளவும் கிராம சேவையாளர் பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான வீதிகளை இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். | | மீளாய்வாண்டில் நடாத்திச் செல்லப்பட்ட 18 வேலைகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 3,173,629 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,635,243 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,227,085 | 4,310,090 | 3,674,500 | 635,590 | 3,232,085 | 4,050,186 | 3,012,862 | 1,037,324 |
| (ii) | வாடகை | 2,320,000 | 2,060,372 | 1,817,659 | 242,713 | 8,647,000 | 3,763,782 | 3,326,869 | 436,912 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 320,000 | 337,150 | 335,150 | 2,000 | 352,500 | 313,300 | 313,300 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,700,000 | 3,052,600 | 3,034,725 | 17,875 | 10,549,000 | 17,751,005 | 11,331,388 | 14,719,617 |
| | | 7,565,085 | 9,760,212 | 8,862,034 | 898,178 | 22,780,585 | 25,878,273 | 17,984,419 | 16,193,853 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 618,438 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,000,000 ஆக இருந்தன. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப் பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், முத்திரைக் கட்டணங்களின் பட்டோலைகள் பரீட்சிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 05 பிரதான விடயங்களுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | சபையினால் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 14 பிரதான விடயங்களுக்கான உப விதிகளை விதித்து வர்த்தமானியின் மூலம் பிரசுரித்து அமுல்படுத்தப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| 2019 ஆம் ஆண்டின் சபை வேலைகள் மற்றும் உறுப்பினர்களின் முன்மொழிவுக்காக பாதீட்டின் கீழ் ரூபா 4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அந்த செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| 05 வருட காலத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தில் இனங்காணப்பட்ட 11 நோக்கங்களுக்காக 16 செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இனங்காணப்பட்ட நோக்கங்களுக்கு இடையே 04 நோக்கங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்குரிய ரூபா 140,001 தொகையான கேள்வி வைப்புக்களை விடுவிப்பதற்கோ அல்லது வருமானதிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்காக ஒரு சமூக சபை வீதம் ஸ்தாபிக்க வேண்டியிருந்த போதிலும், அகலவத்தை பிரதேச சபையில் 34 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக 19 சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவின் பிரகாரம் சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். | மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் எதிர் காலத்தில் சமூக சபைகளை ஸ்தாபிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடம்**<br>ஒரு வருமான பரிசோதகர் பதவி, இரண்டு கனரக இயந்திர செயற்படுத்துனர் பதவிகள், 03 வேலைக்கள தொழிலாளர் பதவிகள் மற்றும் 02 சுகாதார தொழிலாளர் பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | **அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன்கள்**<br>சேவையை விட்டுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 65,562 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகளை விதித்துக் கொள்ளாமல் 08 முன்பள்ளி பாடசாலைகளில் குழந்தைகளை சேர்ப்பதற்கான கட்டணமாக 409 சிறுவர்களிடம் இருந்து ரூபா 440,500 தொகை அறிவிடப்பட்டிருந்தது. | உப விதியினை விதிக்காமல் முன்பள்ளி பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்பட முடியாது. | முன்பள்ளி பாடசாலைகள் தொடர்பான கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று நிதிக் கணக்காய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கிரீன்பாக் 01 கட்டம் - காணி ஏலமிடலில் பொது பகுதிக்கு வடக்காக 10 பேர்ச் காணியின் உரிமையாளரினால் சபைக்குச் சொந்தமான காணியின் பகுதியையும் உரித்தாக்கி முன்பக்கமாக மதிலொன்று சட்ட ரீதியற்ற வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்ள வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | மேற்கூறப்பட்ட நிலப் பகுதிக்குரிய உரித்துறுதி மற்றும் நில வரைபடங்களின் மூலப் பிரதி சபையிடம் காணப்படாமையின் காரணமாக சபைக்கு ஒதுக்கப்பட்ட பொதுக் காணிகளின் பகுதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. | பொதுப் பகுதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தி அளவிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எதிர் காலத்தில் மக்களின் நல விடயங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.5 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படாமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான டிப்பர் வாகனம், வீதிச் செப்பனிடுகை மற்றும் செப்பனிடும் கம்பெக்டர் என்பன பழுதுபார்க்க முடியுமான நிலையில் காணப்பட்ட போதிலும் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்க்க முடியுமான நிலையில் காணப்படுகின்ற சொத்துக்களை பழுது பார்த்தல் வேண்டும். | எதிர்காலத்தில் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். |

**3.6 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 5.5 மில்லியன் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதிலும், அமுல்படுத்த வேண்டிய முறைகள் தொடர்பான விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் மற்றும் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரணவிரு பிரியந்த குணசிங்க மாவத்தைக்கு கொங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யும் போது வீதியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக Core பரிசோதனை மூலம் பெறப்பட்ட மாதிரியின் அடிப்படையில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் தனித்தனியான வெவ்வேறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 86,656 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாணிக்கப்பட்ட வீதியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக Core testing மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு கொடுப்பனவு செய்வதற்காக மாவட்ட பொறியியலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அகலவத்த பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பாலிந்தநுவர பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 7,782,632 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அகலவத்த பிரதேச சபையில் இருந்து | சபைகளுக்கு இடையே பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,931,815 ஆக பதியப்பட்டமையின் காரணமாக ரூபா 1,850,817 வேறுபாடொன்று காணப்பட்டது. மேலும், அகலவத்த பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பாலிந்தநுவர பிரதேச சபையில் இருந்து கிடைக்க வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,342,424 தொகையான மீதியொன்று காணப்பட்ட போதிலும், பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்களில் அவ்வாறான மீதியொன்று காண்பிக்கப்பட்டிக்கவில்லை.